# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1988 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்குகள் (திருத்தச்) சட்டம்

---

*(1988, நவம்பர் 30 ஆந் தேதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது,*

---

*1988, டிசெம்பர் மாதம் 02 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை: சதம் 90* *தபாற் செலவு: சதம் 75*

## 1988 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க, விலங்குகள் (திருத்தச்) சட்டம்

[1988, நவம்பர் 30 ஆந் திகதியன்று அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ. ஓ. 3/79
1776

### 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க விலங்குகள் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டமானது 1988 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விலங்குகள் (திருத்தச்) சட்டமென எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. இதனகத்துப்பின்னர் ("முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, விலங்குகள் சட்டத்தின் 2 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 1958 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "இவ்வுட்பிரிவில்" என்ற சொற்கள் தொடங்கி "எனப் பொருளாகும்" என்ற சொற்கள் வரையிலான சொற்களுக்குப் பதிலாகப் பின்வரும் சொற்களை இடுவதன் மூலமும் :—

> "இவ்வுட்பிரிவில், "தோதான அதிகாரி" என்பது அரசாங்க விலங்கு அறுவைமருத்துவர் ஒருவர் அல்லது அவரால் எழுத்தில் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் என அல்லது ஏதேனும் உள்ளூரதிகாரசபையினால் வேலைக்கமர்த்தப்பட்ட விலங்கு அறுவை மருத்துவர் ஒருவர் என அல்லது பணிப்பாளரின் ஒருப்பாட்டுடன் உள்ளூரதிகாரசபையினால் நியமிக்கப்பட்ட வேறு எவரேனும் அலுவலர் எனப் பொருளாகும்.";

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் இறுதியில் பின்வரும் உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலமும் :—

> "(3) இப்பிரிவில் "பசு" என்பது பெண் எருமை ஒன்றையும் உள்ளடக்கும் என்பதுடன் "பசுக்கன்று" என்னும் சொல்லமைப்பு அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும்.";

3. ஆயிரத்துத்தொளாயிரத்து அறுபத்தெட்டாம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அதன் (1) ஆம் பந்தியை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன்மூலமும் :—

> "(1) ஏதேனும் நிருவாக மாவட்டத்தினுள், மாவட்டத்திற்கு அல்லது மாவட்டத்திலிருந்தான விலங்குகள் கொண்டு செல்லப்படுவதைத் தடைசெய்தல், மட்டுப்படுத்தல், கட்டுப்பாடு செய்தல் அல்லது ஒழுங்குபடுத்தல் ;";

2—ஏ 096941—3,075 (87/05)

(2) அதன் (3) ஆம் பந்தியில் "கொண்டுசெல்லப்பட்டது; அத்துடன்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கொண்டுசெல்லப்பட்டது"; என்னும் சொல்லை இடுவதன்மூலமும்;

(3) நான்காம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்திகளை இடுவதன் மூலமும் :—

"(5) விலங்குகளைக் கொண்டுசெல்வதற்கான அனுமதிப்பத்திரங்களுக்காக விண்ணப்பிக்கும்போது அவதானிக்கப்பட வேண்டிய நடவடிக்கை முறை; அத்துடன்

(6) கொண்டுசெல்லல் அனுமதிப்பத்திரங்கள் தொடர்பான கட்டணங்களை விதித்துரைத்தல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆ என்னும் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3ஆ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "அல்லது கமத்தொழில் அலுவலர்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அல்லது அரசாங்க விலங்கு அறுவை மருத்துவர்" என்ற சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவில், "இப்பிரிவின் நோக்கங்களுக்காக" என்ற சொற்களிலிருந்து "எனப் பொருளாகும்" என்ற சொற்கள்வரையிலான எல்லாச் சொற்களையும் நீக்கிவிடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 3இ, 3ஈ என்ற புதிய பிரிவுகளை உட்புகுத்துதல்.

5. பின்வரும் புதிய பிரிவுகள், 3ஆ என்னும் பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், முதன்மைச்சட்டவாக்கத்தின் 3இ, 3ஈ என்னும் பிரிவுகளாகப் பயனுறுதலும் வேண்டும் :—

"விலங்குகளை அகற்றுதல் தொடர்பிலான கொண்டுசெல்லல் அனுமதிப் பத்திரங்கள்.

3இ (1) ஏதேனும் நிருவாக மாவட்டத்தினுள், அம் மாவட்டத்துக்கு அல்லது அம்மாவட்டத்திலிருந்து அந்நோக்கத்துக்காக அந்நிருவாக மாவட்டத்தின் பெரும்பாகமொன்றின் உதவி அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட போக்குவரத்து அனுமதிப்பத்திரம் ஒன்றின் அதிகாரத்தின்கீழ் அல்லாது ஆளெவரும் விலங்கு எதனையும் கொண்டுசெல்லல் ஆகாது.

(2) கொண்டுசெல்லல் அனுமதிப்பத்திரத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் எந்நிருவாக மாவட்டத்திற்குள் அல்லது மாவட்டத்திலிருந்து விலங்கு எதுவும் கொண்டுசெல்லப்படவுள்ளதோ, அந்நிருவாக மாவட்டத்தின் பெரும்பாக உதவி அரசாங்க அதிபருக்கு விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், விதித்துரைக்கப்பட்ட கட்டணத்துடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(3) ஒவ்வொரு கொண்டுசெல்லல் அனுமதிப்பத்திரமும் அது முன்னரே இல்லாதொழிக்கப்பட்டாலொழிய அது வழங்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலத்துக்கு வலுவிலிருத்தல் வேண்டும்.

இப்பாகத்தின் கீழான தவறுகள் பிடியாணையின்றிக் கைதுசெய்தகு தவறுகளாதல் வேண்டும்.

3ஈ. 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் ஏற்பாட்டின் ஏற்புடைமை நோக்கத்துக்காக, அச்சட்டத்திற்கான முதலாம் அட்டவணையில் அடங்கி உள்ள எது எவ்வாறிருப்பினும், இப்பாகத்தின் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் கீழான எல்லாத் தவறுகளும் பிடியாணையின்றிக் கைது செய்தகு தவறுகளாதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 5அ என்னும் பிரிவை உட்புகுத்தல்.

6. முதன்மைச் சட்டவாக்கமானது, அதன் 5 ஆம் உட்பிரிவை உடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"குறித்துரைக்கப்படாத இடங்களில் விலங்குகளுக்கு சூட்டுக் குறியிடுதல் தவறென்றாதல்.

5அ. ஐந்தாம் பிரிவின்கீழ், அவரது கால்நடையைச் சூட்டுக்குறியிடச் செய்தல் வேண்டுமெனத் தேவைப் படுத்தப்பட்ட ஆளொருவர், கால்நடைச் சூட்டுக்குறியிடுதல் தொடர்பாக இச்சட்டத்தின்கீழ் வலுவிலிருக்கக்கூடிய அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவை தவிர்ந்த வேறு இடங்களில் அத்தகைய கால்நடையைச் சூட்டுக்குறியிடச் செய்வித்தல் ஆகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவானது, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"சொந்தக்காரர்களால் அரசாங்க விலங்கு அறுவை மருத்துவருக்கு கால்நடைகளின் விவரணத்தையும் சூட்டுக் குறிகளையும் கொண்ட விபரத்திரட்டு கொடுத்துதவப் படவேண்டும் என்பது

6. ஏதேனும் கால்நடையைச் சொந்தமாக வைத்திருக்கும் ஆள் ஒவ்வொருவரும், ஒவ்வோர் ஆண்டிலும் சனவரி 31 ஆம் தேதிக்குப் பிந்தாமல், அத்தகைய கால்நடை எவ்விடப் பரப்பில் வைத்திருக்கப்படுகின்றதோ, அவ்விடப் பரப்பின் அரசாங்க விலங்கு அறுவை மருத்துவருக்கு அத்தகைய கால்நடை பற்றிய விவரணத்தையும், அவை ஒவ்வொன்றினதும் சூட்டுக்குறிகளையும் கொண்ட விபரத்திரட்டொன்றை விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் கொடுத்துதவுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவானது, இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"கால்நடை பற்றிய இடாப்பொன்றைப் பேணுவதற்கும் கால்நடை பற்றிய உறுதிச் சீட்டுக்களை வழங்குவதற்கும் அரசாங்க விலங்கு அறுவை மருத்துவருக்குள்ள கடமை.

7. ஒவ்வோர் அரசாங்க விலங்கு அறுவைமருத்துவரும்—

(அ) விதித்துரைக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்தில், தனது இடப்பரப்பிலுள்ள கால்நடைகளின் விவரணத்தையும், சூட்டுக்குறிகளையும் கொண்ட இடாப்பொன்றைப் பேணிவருதல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின்கீழ் வலுவிலுள்ளவாறான கால்நடைக்குச் சூட்டுக்குறியிடுதல் தொடர்பான அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கிணங்க சூட்டுக்குறியிடப்பட்ட கால்நடையின் சொந்தக்காரருக்கு, அத்தகைய கால்நடை ஒவ்வொன்றும் தொடர்பாக விதித்துரைக்கப்பட்ட படிவத்தில், உறுதிச்சீட்டொன்றை வழங்குதல் வேண்டும், அல்லது வழங்கச்செய்வித்தல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 9 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

"இடத்தைச் சுட்டிக்காட்டத் தக்கதாக சூட்டுக்குறிகளை இடுமாறு விலங்கினது சொந்தக்காரரைப் பணிப்பதற்கு அரசாங்க விலங்கு அறுவைமருத்துவருக்குள்ள தத்துவம்.

9. ஏதேனும் இடப்பரப்பின் அரசாங்க விலங்கு அறுவைமருத்துவர், அது அவசியமென்று அவர் கருதினால், அவர் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய காலத்தினுள், அவ்விலங்கு எவ்விடத்தில் வைத்திருக்கப்படுகின்றதோ, அவ்விடத்தினைச் சுட்டிக்காட்டத்தக்கவகையில் அவர் தேவைப்படுத்தக்கூடியவாறான அத்தகைய வேறு குறிகளை அவ்விலங்குக்கு இட்டு வைத்திருக்குமாறு ஏதேனும் விலங்கினது சொந்தக்காரரைப் பணிக்கலாமென்பதுடன் அத்தகைய சொந்தக்காரர் அத்தகைய பணிப்புரையைக் கொண்டு நடாத்துதலும் வேண்டும்."

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது, அதன் (1) ஆம் உட்பிரிவில் "ஐந்து ரூபாவை" என்ற சொற்களுக்குப் பதிலாக "நூறு ரூபாவை" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 19அ என்ற புதிய பிரிவை உட்புகுத்துதல்.

11. முதன்மைச் சட்டவாக்கமானது, 19 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"உரிமைகோரப்படாத விலங்குகளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்.

19. (அ) பதினான்காம் அல்லது 16 ஆம் பிரிவுகளின் கீழ் கைப்பற்றப்பட்டுக் கட்டித் தடுத்து வைத்திருக்கப்பட்டுள்ள ஏதேனும் விலங்கானது அதன் சொந்தக்காரரால் அல்லது சொந்தக்காரர் சார்பில் எவரேனும் ஆளி

ளுல் அவ்வாறு கைப்பற்றப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் உரிமை கோரப் படாதவிடத்து, அது எந்நிருவாக மாவட்டத்தில் தடுத்து வைத்திருக்கப்படுகிறதோ அந்நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபரினுல் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரினுல் பகிரங்க ஏலத்தில் விற்கப்படல்வேண்டும்; அத்துடன்—

(அ) விற்பனேயானது தனிப்பட்ட காணியுள் அத்துமீறிப்புகுந்ததால் தடுத்துவைக்கப்பட்டுள்ள விலங்கொன்று தொடர்பிலானதாகவிருக்கும் ஏதேனும் விடயத்தில், அத்துமீறலினுல் ஏற்பட்டதும் விதித்துரைக்கப்பட்ட முறையில் மதிப்பீடுசெய்யப்பட்டதுமான சேதவீட்டுத் தொகையும் அத்துடன் தடுத்துவைத்தற்காலப் பகுதியின்போது அவ்விலங்கின் பேணலுக்கு உறப்பட்ட நியாயமான செலவுகளும், அத்தகைய விற்பனேயிலான வரும்படிகளிலிருந்து அத்தகைய காணியின் சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்குச் செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் எஞ்சியது எதுவுமிருப்பின், அது திரட்டுநிதியத்தின் வரவிலிடப்படுதல் வேண்டும்;

(ஆ) விற்பனேயானது தனிப்பட்ட காணி தவிர்ந்த வேறு ஏதேனும் காணியின் அத்துமீறிப் புகுந்த விலங்கொன்று தொடர்பிலானதாகவிருக்கின்ற ஏதேனும் விடயத்தில், அத்தகைய விற்பனேயிலான வரும்படியானது திரட்டு நிதியத்தின் வரவில் இடப்படுதல் வேண்டும்.".

**முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.**

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவானது இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :—

**" அழிக்கப்பட்ட விலங்குகளின் இறந்த உடல் கூளைக் கையுதிர்த்தல்.**

24. இருபத்திரண்டாம் பிரிவினது அல்லது 23 ஆம் பிரிவினது ஏற்பாடுகளின் கீழ் சுடப்பட்ட அல்லது வேறு வகையாக அழிக்கப்பட்ட விலங்கு ஒவ்வொன்றினதும் சொந்தக்காரர் விலங்கினது இறந்த உடலை அகற்றுவதற்கு உரிமையுடையவராதல் வேண்டும். அத்துடன், அதனை அகற்றுவதற்கு உரிமையுடைய எவரேனும் ஆளினுல் அவ்விறந்த உடலுக்கான கோரிக்கை எதுவும் செய்யப்படாவிட்டால், எவ்விடப்பரப்பினுள் விலங்கானது சுடப்பட்டதோ அல்லது வேறுவகையாக அழிக்கப்பட்டதோ, அவ்விடப்பரப்பின் அரசாங்க விலங்கு அறுவைமருத்துவரால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொருவர் மூலம் இறந்த உடலானது பகிரங்க ஏலத்தில் விற்கப்படுதல் வேண்டும். அத்துடன் அவ்விற்பனேயின் வரும்படிகள் திரட்டு நிதியத்துக்கு வரவில் இடப்படுதலும் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 24 அ என்ற புதிய பிரிவை உட்புகுத்துதல்.

13. முதன்மைச் சட்டவாக்கமானது 24 ஆம் பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"அத்துமீறிப் புகுந்த விலங்குகளின் சொந்தக்காரரிடமிருந்து குற்றப் பணத்தை அறவிடுதல்.

24அ. (1) பதினைன்காம் பிரிவின்கீழ் அல்லது 15 ஆம் பிரிவின்கீழ் ஏதேனும் விலங்கானது, கைப்பற்றப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருக்குமிடத்து, அத்தகைய விலங்கு எந்நிருவாக மாவட்டத்தினுள் தடுத்துவைக்கப்பட்டுள்ளதோ அந்நிருவாக மாவட்டத்தின் அரசாங்க அதிபர், எழுத்திலான அறிவித்தல் மூலம் விலங்குகளின் சொந்தக்காரரிடமிருந்து அல்லது அதற்குப் பொறுப்பாகவுள்ள ஆளிடமிருந்து அப்பிரிவின்கீழ் சேதவீடாக அல்லது செலவுகளாக வருமதியாகவுள்ள ஏதேனும் பணத்தொகையை, அரசாங்க அதிபர் அத்தகைய அறிவித்தலில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்குள் செலுத்துமாறு அத்தகைய சொந்தக்காரரை அல்லது பொறுப்பாகவுள்ள ஆளைத் தேவைப்படுத்துதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் அரசாங்க அதிபருக்குச் செலுத்தப்பட்ட ஏதேனும் பணத்தொகையானது—

(அ) தனிப்பட்ட காணியொன்றுக்கான சேதவீட்டின் கணக்கு மீது அத்தகைய பணத்தொகை செலுத்தப்பட்டிருக்கும் ஏதேனும் விடயத்தில், அத்தகைய தனிப்பட்ட காணியின் சொந்தக்காரருக்கு அல்லது குடியிருப்பாளருக்கு அரசாங்க அதிபரால் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும் ; அல்லது

(ஆ) தனிப்பட்ட காணி தவிர்ந்த வேறு ஏதேனும் காணியிலான அத்துமீறுகை ஒன்றின் கணக்கில் அத்தகைய பணத்தொகையானது செலுத்தப்பட்டிருக்கும் ஏதேனும் விடயத்தின் திரட்டு நிதியத்துக்கு அவரால் வரவிலிடப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவைத் திருத்துதல்.

14. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25 ஆம் பிரிவானது அதன் (1) ஆம் உட்பிரிவில், "இருபது ரூபாவை" என்ற சொற்களுக்குப் பதிலாக "நூறு ரூபாவை" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவானது "ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு" என்ற சொற்களிலிருந்து "ஆளாதல் வேண்டும்" என்ற சொற்கள் வரையிலான எல்லா சொற்களுக்கும் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"இருநூற்று ஐம்பது ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது இரு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதிக்கான சாதாரண மறியற்றண்டனைக்கு அத்துடன் இரண்டாவது அல்லது அடுத்து புரியப்படுகின்ற தவறுக்கு ஆயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு அல்லது ஆறு மாதங்களை விஞ்சாதவொரு காலத்துக்கான சாதாரண மறியற்றண்டனைக்கு ஆளாதல் வேண்டும்.".

16. பின்வரும் புதிய பிரிவானது 37அ என்ற பிரிவை உடனடுத்து இத்தால் உட்புகுத்தப்படுகின்றதென்பதுடன் இது முதன்மைச் சட்டவாக்கத்தின் 37ஆ என்ற பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும் :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 37 ஆ என்ற பிரிவை உட்புகுத்துதல்.

"அரசாங்க விலங்கு அறுவை மருத்துவர் சமாதான அலுவலர்களாகக் கருதப்படுதல்.

37ஆ. இச்சட்டத்தின்கீழான ஏதேனும் தவறு தொடர்பில், அச்சட்டத்தினால் சமாதான அலுவலரின் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பிரயோகிக்கும் நோக்கத்துக்காக 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவைச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட ஒவ்வோர் அரசாங்க விலங்கு அறுவைமருத்துவர் சமாதான அலுவலரொருவராக கருதப்படல் வேண்டும்.".

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவானது இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 38 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(அ) "விலங்கு" என்ற வரைவிலக்கணத்துக்குப் பதிலாக பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன் மூலமும் :—

"விலங்கு" என்பது சுத்தமான கால்நடை (எலஹரக்கா) அல்லது எருமையென்று பொருள்படுவதுடன், IV ஆம் பாகத்தில் செம்மறியாடு, ஆடு, பன்றி அல்லது பண்ணைப் பறவை என்பனவற்றையும் உள்ளடக்கும்;';

(ஆ) "சூட்டுக்குறியிடல்" என்ற வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :—

'"சூட்டுக்குறியிடல்" என்பது காது குத்துதல், காதில் பச்சை குத்துதல், வேறு பிரித்துக்காட்டும் எழுத்துக்களை அல்லது இலக்கங்களை இரசாயனப் பதார்த்தங்களினால் குறித்தல், சூட்டுக்கோல் சுடுதல், காது நள்ளுதல் என்பவற்றையும் உள்ளடக்கும்;';

(இ) "பணிப்பாளர்" என்ற வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் புதிய வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :—

"பணிப்பாளர்" என்பது விலங்கு உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் என்று பொருள்படும் ;

(ஈ) "விலங்கு அறுவைமருத்துவர்" என்ற வரைவிலக்கணத்துக்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலமும் :—

"விலங்கு அறுவைமருத்துவர்" என்பது 1956 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க விலங்கு அறுவைமருத்துவர்கள் மருத்துவத் தொழிலர் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட விலங்கு அறுவைமருத்துவரொருவரென்று பொருள்படும்."; அத்துடன்

(உ) பகுதிகள் II, III ஆகியவற்றிலுள்ள "மாடு" என்பதன் அர்த்தம் சுத்தமான மாடு அல்லது எருமை என்பதாகும்.